STC.No.84/2026 PW1.திரு.ராஜேஷ்வரன்

தேதி– 10.09.2026

எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் டிப்ளமோ EEE படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் பால்பண்ணை வைத்து தொழில் செய்கிறேன். எனக்கு சொந்த நிலம் உள்ளதா என்றால் இல்லை. பால்பண்ணை எனது அப்பா நடத்தி வந்தார், அவருக்கு வயதானதால் நான் பார்த்துக்கொள்கிறேன். சொந்தமாக 10 மாடுகள் வைத்து பால் எடுத்து விற்பனை செய்வேன். பால் வியாபாரத்தில் எனக்கு மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்றால் மாதம் ரூ.20 – 25 ஆயிரம் வரும். விவசாயத்தின் மூலம் எனக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் 40 – 60 நாட்களில் ரூ.12 ஆயிரம் கிடைக்கும். இதைத் தவிர்த்து வேறு வருமானம் இல்லை என்றால் கார் தரகராக இருந்து, மாதத்திற்கு 1000 முதல் 2000 வரை வருமானம் கிடைக்கும்.சில மாதத்திற்கு கார் தொழில் மூலம் வருமானம் வராது.நான் வேறு நபர்களிடம் வரவு செலவு வைத்திருக்கேனா என்றால் இல்லை. காசோலை மூலம் வேறு பரிவர்த்தனை செய்துள்ளேனா என்றால் இல்லை, இதுதான் முதல் முறையாகும். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு பிள்ளைகள் மற்றும் ஒரு மனைவி உள்ளார் என்ற விவரம் மட்டும் தெரியும். எதிரியின் பிள்ளைகள் என்னபடிக்கிறார்கள் என்றால் தெரியாது. அதை குறித்து எதிரி கூறியது இல்லை.

2. எதிரியின் மனைவி எங்கு வேலை செய்கிறார் என்ற விவரம் தெரியும் என்றால் எதிரியின் மனைவியின் அப்பா கார்மெண்ட்ஸ்சில் வேலை பார்ப்பதாக கூறினார். என்ன கார்மெண்ட்ஸ் வைத்துள்ளார் என்றால் கம்பத்தில் சீப் மாஸ்டர் என்ற கடை வைத்துள்ளார். மேற்படி கடையில் வைத்து எதிரியையும், அவரது மனைவியும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். சீப் மாஸ்டரின் கடையின் உரிமையாளர் மகளைதான் எதிரி திருமணம் முடித்துள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் கார் தரகராக இருக்கிறார், கார் சம்பந்தமான விபரங்களை எனக்கு அவர்தான் கூறினார், மற்றபடி என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. எதிரியும், நானும் யார்

யாருக்கு கார் விற்பனை செய்துள்ளோம் என்றால் வெளியூரில் உள்ள நபர்களுக்கு விற்பனை செய்துள்ளோம், 4 மாத காலமாக நான் கார் விற்பனை செய்து நிறுத்தி விட்டேன். யார் யாருக்கு விற்பனை செய்தோம் என்று குறிப்பிட்டு கூற முடியாது. நான் சொல்வது போல் எதிரியின் மனைவி சீஃப் மாஸ்டரின் கடையில் வேலை செய்யவில்லை என்றும், எதிரி கார் தரகராக வேலை செய்ததில்லை என்றால் சரியல்ல.

3. எதிரி எனக்கு எவ்வளவு காலம் பழக்கம் என்றால் இரண்டு, மூன்று வருடம் பழக்கம். எதிரிக்கு போன் மூலம் பேசி உள்ளேனா என்றால் பேசி உள்ளேன். எந்த செல்போன் நம்பரில் இருந்து எதிரிக்கு பேசுவேன் என்றால் எனது பழைய செல் நம்பரில் இருந்து பேசுவேன், அந்த நம்பர் ஞாபகம் இல்லை. எனது பழைய போன் 6 மாதத்திற்கு முன்பு தண்ணீரில் விழுந்து விட்டது. மேற்படி செல்போன் நம்பரை நான் எவ்வளவு காலமாக பயன்படுத்தினேன் என்றால் மூன்று வருடம் பயன்படுத்தினேன். உண்மையில் நான் மூன்று வருடம் மேற்படி செல்போன் நம்பரை பயன்படுத்தியிருந்தால் அந்த நம்பர் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், தற்போது வழக்கிற்காக செல்போன் நம்பர் தெரியாது என பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் செல்போன் நம்பர் 9442378787 ஆகும். மேற்படி நம்பருக்கு நான் எவ்வளவு காலத்திற்கு முன்பு பேசினேன் என்றால் ஜனவரி மாதம் 2026 பேசியுள்ளேன். மேற்படி செல்போன் நம்பரை எதிரி பயன்படுத்தி 10 வருடத்திற்கு மேல் ஆகிறது என்றும், அதனை எதிரி தற்போது பயன்படுத்துவதில்லை என்றால் சரியல்ல.

4. இதற்கு முன்பு எனக்கும், எதிரிக்கும் என்ன வரவு செலவு இருந்தது என்றால் எதுவும் இல்லை. எதிரியின் பொருளாதார பின்புலத்தை குறித்து எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப விஷயத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் என்னை எதிரி அழைக்க மாட்டார். இந்த விஷயத்திற்கு மட்டும்தான் பயன்படுத்துவர். நானும் எதிரி அழைக்காமல் செல்ல மாட்டேன். எதிரி மூன்று வருடமாக என்ன விசேஷம் வைத்துள்ளார் என்றால் அவர் என்னை அழைக்கமாட்டார், நான் அவரது வீட்டிற்கு சென்றதில்லை. எதிரியை வாகனத்தில் அழைத்து சென்றாலும் தெருமுனையில் எதிரியை விடும்படி கூறிவிட்டு என்னை போக சொல்லி விடுவார். புலவர் தெருவில் எதிரியின் வீடு உள்ளது என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரிதான் என்னை அழைத்துச் செல்வார். மனுவில் குறிப்பிட்டுள்ள வீட்டில்தான் எதிரி உள்ளார் என்று விபரம்

எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அந்த வீட்டில் இருந்து தான் எதிரி வந்தார். மேற்படி முகவரியில் எதிரி குடியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும், அவரது ஆதார் கார்டை பார்த்துள்ளேன். எதிரியின் ஆதார் கார்டை எப்போது அவர் கொடுத்தார் என்றால் கார் வாங்கி விற்கும் போது அவர் என்னிடம் கொடுத்துள்ளார்.

5. காசோலை தொகை எவ்வாறு எனக்கு கிடைத்தது என்றால் எப்போதும் நான்கு லட்சம் வரை வைத்திருப்பேன். DBS, யூகோ வங்கி கம்பம் கிளையில் எனக்கு வங்கி கணக்குகள் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்படி வங்கி கணக்கில் அதிக தொகை எவ்வளவு வைத்திருப்பேன் என்றால் ரூ.20000 இருக்கும். எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். அந்த சமயத்தில் யார் இருந்தார் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன், எனது அப்பா தோட்டத்திற்கு சென்று விட்டார். நான் பணம் கொடுத்த விவரம் யாருக்கு தெரியும் என்றால் எனக்கும், எதிரிக்கும் தெரியும். என்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால் காசோலை கொடுத்தார், வேறு ஆவணங்கள் கொடுக்கவில்லை. பொதுவாக கடன் கொடுக்கும் போது என்னென்ன ஆவணங்கள் பெற்று பணம் கொடுப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. காசோலை யார் கேட்டதன் பேரில் கொண்டு வந்து கொடுத்தார் என்றால் அவராக தான் எடுத்து வந்து கொடுத்தார், நான் காசோலையை கேட்கவில்லை.காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் பூர்த்தி செய்த காசோலையை கொண்டு வந்து கொடுத்தார்.என் முன்னிலையில் காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை மற்றும் கையொப்பம் செய்யவில்லை. எந்த தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 19.2.2026 ஆம் தேதி அன்று வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

6. யார் கூறியதன் பேரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் நான்தான் கூறினேன். ம.சா.ஆ.4 அறிவிப்பில் 18.2.2026 ஆம் தேதி அன்று வசூலுக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், தட்டச்சு பிழையாகும். எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் சம்பந்தமாக காவல் நிலையத்தில்

என்னையும், எதிரியையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதில் எதிரி பொய் கூறுகிறார் என நான் தெரிவித்தேன். காவல் நிலையத்திற்கு சென்ற பிறகுதான் நான் மறு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தெரியாது. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் என்ன விலாசம் குறிப்பிட்டிருந்தது என்றால் நான் கவனிக்கவில்லை.

7. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முகவரியில் எதிரி குடியிருக்கவில்லை என குறிப்பிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். எதிரி வேறொரு முகவரியை குறிப்பிட்டுதான் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் வேறு ஒரு முகவரி குறிப்பிட்டு இருந்தது என்றால் முகவரியை நான் பார்க்கவில்லை. என்னை யார் என்று எதிரிக்கு தெரியாது என்றும், நான் கூறிய முகவரி பொய் என்றும், அதனால் நீதிமன்றத்தில் வைத்து பார்த்துக் கொள்ளும்படி போலீசார் என்னிடம் கூறினார்கள். காவல் நிலையத்தில் நடந்த விபரத்தையும், பதில் அறிவிப்பை குறித்தும் எனது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். எதிரியின் பதில் அறிவிப்பை எனது வழக்கறிஞரிடம் நான் கொடுத்திருந்தால் அதைக் குறித்து எனது வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு இருப்பார் என்றும், ஆனால் நான் பதில் அறிவிப்பை மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. எதிரி புலவர் தெருவில் குடியிருக்கவில்லை என்று கூறிய பின்பும், அதே முகவரிக்குதான் நான் மறு அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். 2015 ல் காசோலை தொலைந்து விட்டது என்று அவரது வங்கியில் மனு கொடுத்துள்ளார் என்றும், அதனால் எதிரி எனக்கு காசோலை கொடுக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

8. ம.சா.ஆ.5 ஆன ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பில் உள்ள முகவரியில் எதிரி குடியிருக்கவில்லை என்றும், எதிரியின் சகோதரிதான் குடியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. நான் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முகவரி எதிரியின் பூர்வீக வீட்டின் முகவரி என்றும், 10 ஆண்டுகளுக்கு மேலாக எதிரி கம்பத்தில் உள்ள தாத்தப்பன் குளத்தில் குடியிருந்த வருகிறார் என்றால் தெரியாது. பூர்விக வீட்டில் எதிரியின் சகோதரி குடியிருப்பதால் நான் அனுப்பிய அறிவிப்பின் விபரம் எதிரிக்குத்

தெரிய வந்தது என்றும், அதை தவிர்த்து எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றும், எனக்கும், எதிரிக்கும் எந்த வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ.5 லட்சம் பணம் கொடுப்பதில் எனக்கு எந்த ஆதாயமும் இல்லை என்றால் சரிதான். எனக்கும், எதிரிக்கும் பொதுவான நண்பர்கள் உள்ளார்களா என்றால் இல்லை.

9. எதிரி எவ்வாறு எனக்கு பழக்கம் என்றால் தேனியில் ஒரு நபரிடம் கார் பார்க்க சென்ற போது எதிரியும் அங்கு வந்தார். அப்போது எதிரியுடன் பேசி பழகினேன். யாரிடம் கார் வாங்க சென்றபோது எதிரி பழக்கமானார் என்றால் அவரது பெயர் ஞாபகம் இல்லை. நானும், எதிரியும் கார் வாங்கி, விற்பனை செய்வது சம்பந்தமாக ஏதேனும் ஒப்பந்தம் போட்டுக் கொண்டோமா என்றால் இல்லை. எதிரி கார் தரகராக வேலை பார்த்தது இல்லை என்றும், கடந்த 5 ஆண்டுகளாக ஆயத்த ஆடை தொழில் செய்கிறார் என்றால் இல்லை, எனக்கு தெரியாது. எந்த வங்கியின் காசோலை எதிரி கொடுத்தார் என்றால் எஸ்பிஐ 703058 காசோலையைக் கொடுத்தார். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு எதிரியின் காசோலை காணாமல் போய்விட்டது என்றும், சட்டத்திற்கு புறம்பாக காசோலையைப் பெற்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. சுருளிபட்டியை சேர்ந்த காலமான வழக்கறிஞர் இளையராஜாவை தெரியும் என்றால் தெரியும். எதிரியும், இளையராஜாவும் வகுப்பு தோழர்கள் என்றால் தெரியாது. எதிரியின் மற்றொரு வகுப்பு தோழரான ராமானுஜமும், இளையராஜாவும் சுருளிப்பட்டியில் பைனான்ஸ் நடத்தினார் என்றால் சரிதான். ரோட்டு மேல் உள்ளது, அதன் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி பைனான்ஸில் எதிரிக்கும், ராமானுஜத்துக்கும் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு வரவு செலவு இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எனது அறிவிப்பு பெற்ற பின்பு என்னைப் பற்றி விசாரித்து பார்த்தபோது நான் ராமானுஜம் நடத்திய பைனான்சில் வேலை பார்க்கிறேன் என்றும், மேற்படி பைனான்ஸில் இருந்த எதிரியின் காசோலையை வைத்து வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனக்கும், எதிரிக்கும் எந்த வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பைனான்ஸிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறிய எதிரியின் செல்போன் நம்பரில் இருந்து ராமானுஜத்திற்கு பல வருடத்திற்கு முன்பு Gpay மூலம் பணம் அனுப்பி உள்ளார் என்றும், அதன் மூலம் தான் எதிரியின் செல் போன் நம்பரை நான் கூறியுள்ளேன் என்றால்

சரியல்ல. மேற்படி வரவு செலவு முடிந்த பின்பு தாவா காசோலையை கேட்டபோது ராமானுஜம் தொலைந்து விட்டது என்று கூறியதால் தான் 15 வருடத்திற்கு முன்பு வங்கியில் காசோலை சம்பந்தமாக மனு கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.

11. எனக்கும், எதிர்க்கும் எந்த வரவு செலவு இல்லை என்றும், ராமானுஜத்தின் ஏற்பாடு பேரில் எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராமானுஜம் நடத்திய பைனான்ஸில் நான் வேலை பார்க்கிறேன் என்றும், அதற்கான சம்பளத்தை எனது வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றும், எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். ராமானுஜனிடம் பொறுப்புக்காக கையொப்பம் மட்டும் செய்த நிரப்பப்படாத காசோலையை பெற்று நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரி சட்டப்படியான கடன் செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் எதிரி அனுப்பிய பதிலறிவிப்பை தாக்கல் செய்யாமலும், எதிரியின் பழைய முகவரியில் அவர் குடியிருக்க வில்லை என்று தெரிந்து அங்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதால் இவ்வழக்கானது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. காசோலை தொகை கொடுக்க எனக்கு போதிய வருமானம் இல்லை என்றும், எதிரிக்கு நான் கைமாற்று கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.09.10 17:24:31 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam